சிவமயம்

Registered as a News-Paper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௬] யாழ்ப்பாணம்:—தாரணவருஷம் புரட்டாதிமீ ௨ (1944 செப்டம்பர்மீ 18 திங்கட்கிழமை) [இல ௭௫

## இந்து முஸ்லிம் ஒற்றுமை கைகூடுமா?

### ராஜாஜியின் திட்டம் பலனளிக்குமா?

### காந்திஜியும் ஜின்னாவும் சந்தித்தார்கள்

**இந்திய நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கத்துடன் இராஜகோபாலாச்சாரியாரின் திட்டமொன்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு மகாத்மா காந்தியும் ஜனப் ஜின்னாவும் சென்ற 9-ந் தேதி பம்பாயில் சந்தித்தார்கள். சமரசப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதன் பலன் யாதாகுமோ வென்று அகில உலகமும் கவனித்துக்கொண்டேயிருக்கின்றது.**

சென்ற 9-ந் தேதி காந்தியடிகளும் ஜனப் ஜின்னாவும், சாயங்காலம் 4 மணிக்கு ஜனப் ஜின்னாவின் வங்களாவில் சந்தித்து மூன்று மணித்தியாலங்களாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் கலந்து பேசும்பொழுது உள்ளே செல்ல ஒருவருக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆகவே இருவரும் தனித்தே தங்கள் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள்.

சேவாக்கிரம வாசிகள் இருவர் சந்திப்பும் நன்மைபயத்தல் வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து காந்தியடிகள் நெற்றியிலே குங்குமப்பொட்டிட்டு வழியனுப்பினார்கள். மகாத்மா அன்று ஒருவருடனும் அதிகம் பேசாது மௌனவிரதமனுட்டித்தார்கள். ஈற்றில் மற்றும் பேச்சு வார்த்தைகளை 11-ந் தேதி 5-30 மணிக்கு ஒத்திவைத்து இருவரும் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டார்கள், அதன் சாராம்சமாவது:— "நாங்கள் இருவரும் சந்தோஷமாகவும் கபடமின்றியும் மூன்றுமணி நேரம் சம்பாஷித்தோம் என்பதே.

தற்போது சென்ற சனிக்கிழமை தொடக்கம் இருவரும் கூடித்தொடர்ந்து தங்கள் பேச்சுக்களை நடாத்தி வருகிறார்கள். சகலரும் இதன் பெறுபேற்றைக் கவனமாக அவதானித்து வருகிறார்கள். ஆனால் ஒருவரும் வாய்திறந்து குற்றங்குறை சொல்ல விரும்பவில்லை, இதற்குக் காரணம் கண்டபடி எதையும் சொல்லி இருவர் மனதையும் மாறுபடுத்தப்படாதென்பதே, தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடக்கிறபடியால் நன்மை கைகூடுமென்று இந்தியப் பத்திரிகைகள் கூறுகின்றன. எல்லாப் பத்திரிகைகளும் இச்சந்திப்பின் முடிவை வெளிப்படவும் அதையிட்டு வாதப் பிரதிவாதங்கள் நடத்தவும் ஆவலுடன் காத்திருக்கின்றன.

சென்ற 14-ந் தேதி மகாத்மா காந்தி தமது 75-வது ஜனன விழாவை இந்துக்கள் கொண்டாடினார்கள். அன்று பல இந்தியப் பிரமுகர்களும் அவரைச் சந்தித்து வாழ்த்தினார்கள். அதே தேதியில் ஜனப் ஜின்னாவை மேஸர். ஃபஸ்லுல் ஹக் சந்தித்து 45 நிமிஷம் அவருடன் சம்பாஷித்தனர்.

இந்திய "ஸ்ரீபிறஸ" என்னும் பத்திரிகையின் விசேஷ நிருபர் மகாத்மா காந்தியை "தம்பாது பாகங்களுக்கு உடன்பட்டுப் பின்பு இந்துக்களின் பிரதேசங்களையும் உரிமைகளையும் கொடுத்துவிடுவீரா?" என்று கேட்டதற்கு அதை மறுத்து அப்படியொன்றும் நடவாது என்று காந்தியடிகள் கூறினார்கள் என்று ஒருசெய்தி வந்துள்ளது.

கஸ்தூரிபாய் ஞாபகார்த்த நிதி அங்கத்தவர்கள் வரும் ஒக்ரோபர் மாசம் இரண்டாந்தேதி பணமுடிப்பை காந்தியடிகளுக்குக் கொடுக்க ஒழுங்கு பண்ணலாமோ என்று அவரது சம்மதத்தைக் கேட்டதற்கு மகாத்மாகாந்தி "நான் எங்கிருப்பேனோ என்பது எனக்குத் தெரியாது?—மறியற்சாலையிலோ அல்லது வெளியில்தானோ?" என்று கூறினாராம். இதையிட்டுப் பலத்த விவாதங்கள் நடைபெறுகின்றன. நடந்துகொண்டிருக்கும் காந்தி ஜின்னா சம்பாஷணை கைகூடாவிட்டால் மறுபடியும் காந்தி சிறை செல்லுவாரக்கும் என்று சிலர் யூகிக்கிறார்கள். அதன் அர்த்தம் நன்றாக ஒருவருக்கும் விளங்கவில்லை.

லோர்ட் சபையில் தொழிற்கட்சி மாஜி கொறடாவான லோட் ஸ்டிரபோல்கி காந்திஜிக்கும், ஜின்னாவுக்கும் கீழ்க்கண்ட செய்தியை ராய்டரின் அரசியல் நிருபரிடம் விடுத்துள்ளார்.

இப்பொழுது காந்திஜிக்கும் ஜனப்ஜின்னாவுக்கும் நடக்கும் சம்பாஷணைகள் அவ்விருவருக்கிடையே ஒற்றுமையையும், இவ்வளவு காலமாக இந்திய ஒற்றுமைக்குப் பெரிய தடையாக இருந்த இந்து முஸ்லிம் பிணக்கையும் போக்கவேண்டுமென்பதே இந்தியாவிடத்தில் அன்பு கொண்டவர்கள், இந்தியமக்கள் ஆகியோரின் பிரார்த்தனை, தீண்டாதவர்கள், இந்திய கிறீஸ்தவர்கள் உள்பட இதர சிறுபான்மையோர் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கக் காந்திஜி தம்மால் முடிந்ததையெல்லாம் செய்வார் என்று நாம் நம்பியிருக்கலாம். ஆகையால் இந்த பேச்சுக்களில் ஏற்படும் சமரசத்திற்கு அடுத்தபடியாக, முக்கிய வகுப்பினரான சீக்கியர்களுடன் ஒரு ஏற்பாட்டுக்கு அவர் வரவேண்டும்.

பிரபல இந்தியர்கள் தங்கள் தங்கள் வகுப்பின் சார்பாகக்கூடி முட்டுக்கட்டைதீர யோசிக்கும் வழியைத்தான் பிரிட்டிஷ்காரர்களான நாங்கள் இவ்வளவு காலமாகக் காட்டிவந்தோம் [illegible] சாபாக [illegible] நியாயமான கோரிக்கைகளையும் பிரிட்டன மறுக்கமுடியாது. அத்தகைய கோரிக்கைகளை மறுக்கவும் பிரிட்டிஷ் மக்கள் விரும்பவில்லை. யுத்த முயற்சியில் தனது முழு சக்தியையும் பிரயோகிக்கும் ஐக்கிய இந்தியா பக்ஷிகளில் நடக்க [illegible] போராட்டங்களுக்குப் [illegible] அரசியல் அநுகூலங்களைத் தரும்.

## ஆஸ்திரேலியாவில் கோதுமை விளைச்சல் குறைந்திருக்கிறது

கான்பெரா, செப் 14—

1931-40 வரை சராசரி வருடத்துக்கு 17 கோடி 80 லட்சம் புசல் கோதுமை கிடைத்திருக்கிறது. ஆனால் இதோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 6 கோடி 60 லட்சம் புசல்தான் இவ்வருடம் கிடைத்திருக்கிறதென்றும் கோடைதான் இதற்குக் காரணமென்றும் மதிப்பிடப்படுகிறது.

## நியூயார்க் நகரத்தில் கடும் புயல்

நியூயார்க் செப் 15—

மணிக்கு 80 மைல் வேகத்தில் நியூயார்க் நகரத்தில் புயல் வீசுகின்றது. வானத்தைப் பரிசிக்கும் அதன் கட்டடங்கள்கூட ஆட்டங்கண்டன. நூற்றுக் கணக்கான உத்தியோகத்தர் காலநிலை சரிப்பட்டுவரும் வரையில் தங்கள் தங்கள் கந்தோர்களில் தங்கியிருந்தனர். நகர வீதிகளில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. சில இடங்களில் தண்ணீர் 5 அடி ஆழத்துக்கு இருக்கிறது.

## ரூபா 25800 கொள்ளையடிக்கப்பட்டதாம்

சென்ற வெள்ளிக்கிழமை மொறட்டுவையில் 'பிறின்ஸ் ஒவ் வேல்ஸ்' கலூரிக்குச் சமீபமாக ஒரு வக்கக் காரத்தையில் ஒரு அரிசிப் பண்டகசாலைப் பணப் பொறுப்பாளர் பிரயாணஞ் செய்தபோழுது அவரிடமிருந்து ஒரு சூட்கேஸிலுள்ள ரூபா 25800 வழிமறித்துக் கொள்ளையடிக்கப்பட்டதாம். இது சம்பந்தமாக நாலுபேரைக் கைதுசெய்திருக்கிறார்கள். வழக்கு வரும் 21-ந் தேதிக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

## அடாதசெயல் செய்தவருக்கு 4 வருடக் கடுங்காவற் தண்டனை

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 19 வயதுள்ள செல்வம் ரத்தினம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவருடைய 8 வயதுப் பெண் குழந்தையாகிய தில வதியிடம் முறைகேடாக நடந்துகொண்டதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிபதி திரு. கென்னன் எதிரிக்கு 4 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

## ஸீஜ்விறீட் அரண் தகர்க்கப்படுகின்றன

### ஆச்சன் வீழ்ச்சி நெருங்கிவிட்டது

செப்டம்பர் 16—

ஆச்சனுக்குத் தெற்குப்பக்கமாகவுள்ள ஜெர்மன் எல்லைப்புறங்களை ஊடுருவிச் சென்ற அமெரிக்கன் துருப்புகள் ஸ்ரோல்பேர்க்கைச் சமீபித்துவிட்டன.

இதுகொலோனுக்கும் றைனுக்கும் 30 மைல் தூரத்திலுள்ளது.

ஆச்சன் ஹேர்ட்ஜலாக்கு வடக்குப்புறமாகவுள்ள துருப்புக்கள் டச்சு எல்லைப் புறங்களையும் கடந்து ஜெர்மன் எல்லைப் புறங்களைச் சமீபித்துவிட்டன.

ஸீஜ்வீறீட் அரண் உடைபடும் நிலையை அடைந்துவிட்டபடியால் ஜெர்மானியர் தங்களிடமுள்ள சகல துருப்புக்களையும்படை பலத்தையும் பிரயோகிக்கின்றார்கள். அமெரிக்கர் அரணைத் தகர்க்க டைனமெற்றும் துப்பாக்கிப் பிரயோகமும் செய்கிறார்கள்.

## கிறீற்றிலிருந்து ஜெர்மனியர் வெளியேறுகின்றனர்

கிறீற்றிலிருந்து ஜெர்மானியர் வெளியேறுகின்றனர் என்பதாக ஹெலெனிக் செய்தி ஸ்தாபனம் ஓர் பத்திரிகைச் செய்தியை விடுத்துள்ளது.

## டோவர் சலசந்தியில் துப்பாக்கிப் பிரயோகம்

ஜெர்மானியர் சென்ற 16ந் தேதி டோவர் ஜலசந்தியில் $9\frac{1}{2}$ மணித்தியாலங்களாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்.

## குவிபெக் மகாநாடு இன்றுடன் முடிவடைகிறது

செப்டம் 16—

பிரித்தானிய பிரதம மந்திரியாகிய திரு வின்ஸ்டன் சேர்ச்சிலுக்கும் அமெரிக்கப் பிரசாதிபதியாகிய திரு. ரூஸ்வெல்டுக்குமிடையில் நடந்த குவிபெக் மகாநாடு இன்று சனிக்கிழமை சாயந்தரத்துடன் முடிவடைகின்றது.

## அமெரிக்காவில் கோர ரயில் விபத்து

டொரெஹாட் செப் 14

இன்றுகாலை அமெரிக்காவில் டொரெஹாட் (இன்டியானா) வுக்கு அருகே சிகாகோவிலிருந்து புறிடாவுக்குப் பிரயாணிகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த புகைரதம், கிழக்கு இல்லியனுய்ஸ் புகைரதத்துடன் மோதியதால் ஏறக்குறைய 100 பேர் மாண்டதாக நம்பப்படுகிறது. இறந்தவர்களிற் பெரும்பாலோர் படை வீரர்கள் என்று பின்னர் தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஞு
புரட்டாதிமீ ௩உ திங்கட்கிழமை

## யுத்தம் விரைவில் முடியுமா?

ஜர்மனியை நான்கு பக்கத்திலும் ஐக்கியராச்சியப்படை சூழ்ந்துகொண்டதெனவும், சில இடங்களில் அப்படைகளுட் சில அணி ஜர்மனியநாட்டின் எல்லையுட் புகுந்துவிட்டனவென்றும், ஜர்மனியருடன் நட்புப்பூண்டு ஐக்கியராச்சியத்தினருக்கு மாறாக இதுகாறும் சமர்விளைத்த அரசினர் சிலர் இப்பொழுது ஹிட்லரின் தோல்வியைக் கண்டு அவர்மீது அவநம்பிக்கை கொண்டு நட்புப் பிரிந்து ஐக்கிய ராச்சியத்தினருடன் சமாதானஞ் செய்து பின்னர் அவர்கள் கேள்விப்படி ஜர்மனியருக்கு மாறாக யுத்தஞ் செய்யலாயினரென்றும் சில வாரங்களாகச் சமாசாரம் பிறக்கலாயின. இப்படியே ரூமேனியா ரூஷியருடன் சமாதானஞ் செய்து கொண்டனர்; சமாதான ஏற்பாடுகளைப் பற்றி பிரதானமாயிருந்த ஜர்மனியருக்கும் [illegible] ஜர்மனியருடைய [illegible] அவுஸ்திரியருக்கும் மாறாக ஐக்கிய ராச்சியத்தினருடன் [illegible] சமாதானம் [illegible].

இவைகளையெல்லாம் உற்று நோக்குமிடத்தில் ஜர்மனியருக்கு விசேஷ நெருக்கடி காலம் சம்பவித்துவிட்டதென்று [illegible] ஆனால் ஜர்மனியர் ஐக்கியராச்சியத்தினர் அவர்தம் நாட்டிற் சென்று தாக்கிச் சமர்புரியும்போது இவ்வளவு சுலபமாயிருக்குமோ என்பதை இப்பொழுது சொல்லமுடியாது; [illegible] ஜர்மனியர் [illegible] ஜப்பானியருக்கு விசேஷ [illegible] உபாயங்களும் முயற்சிகளும்

நீடித்திருக்க மாட்டாவெனலாம்.

ஜர்மனியின் நிலைமை இப்படியிருக்க, ஜப்பானுடைய யுத்த விஷயமும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆராயத்தக்கது; குவிபெக் என்னும் தானத்தில் மிஸ்ரர் சேர்ஜிலும் மிஸ்ரர் றூஸ்வெல்றும் இப்பொழுது சந்தித்துக் கூடிய கூட்டம் ஜப்பானியருடன் சமர்செய்து அவர்களை அறவே தோற்கடிக்கும் நோக்கம் பற்றியதெனவும் சொல்லப்படுகின்றது; ஆனால் இந்தப் பிரதானமான கூட்டத்தில் அந்தப் பெரியார் மூவருள் ரூஷிய சர்வாதிகாரியாகிய மிஸ்ரர் ஸ்ராலின் சேர்தலின்றி வழக்கம்போல விலகித் தூரத்திலே நிற்பது கவலைக்கிடமானதாகும்; ஸ்ராலின் மாத்திரமல்லா ரூஷிய பிரதிநிதிகளெவராயினும் இக்கூட்டத்திலே பங்குபற்றவில்லையாம். ஜர்மனியரை அறவே தோல்வியுறச் செய்துவிட்டு எங்கள் பிருத்தானியரும் அமெரிக்கருஞ் சேர்ந்து ஜப்பானியரைத் தாக்கும்போது, ரூஷியருடைய நிலைமையும் அவர்களுடைய அதிகாரியாகிய மிஸ்ரர் ஸ்ராலினுடைய நிலைமையும் எப்படியாகுமென்பதை அறிவதற்கு உலகம் முழுவதும் ஆவலாகவிருக்கின்றதென்று கூறினும் மிகையாகாது. ஜப்பானியர் உயிரைக் காட்டிலும் மானத்தைப் பெரிதாக மதிக்குஞ் சாதியினரென்று அநுபவமுடையோர் சொல்லுகின்றனர். தாம் பகைவரிடத்திலகப்பட்டுச் சிறையிருப்பதைக் காட்டிலும் தற்கொலை நன்றெனும் கொள்கையுடையவர்களென்பதை ஜப்பானியருட் பலராயிரக்கணக்கானோர் சிறைப்படுதற்கு முந்தித் தம்மைக் கொலைசெய்து கொண்டனரென்ற செய்தியைக் கொண்டு அறியக்கிடக்கின்றது. இப்படிப்பட்ட பிடிவாதமான, உறுதித்தனமான, மானத்தைப் பொருட்டு உயிரைத் துரும்பாக மதிக்கிற ஜப்பானியருடன் சமர்செய்து அச்சாதியினரை அறவே தோல்வியுறச் செய்யும் விஷயத்தில் பிருத்தானியர் அமெரிக்கர் ரூஷியர் என்னும் மூன்று ஐக்கிய அரசினரும் ஏகோபித்து நிற்கவேண்டியதே முறையாகும். இங்ஙனமாக மிஸ்ரர் ஸ்ராலின் ஜப்பானென்றவுடனே ஓடிப்போயது [illegible] அடாத கருமமாகும். ரூஷியருடைய உதவியின்றி அமெரிக்கரும் பிருத்தானியரும் மாத்திரஞ் சேர்ந்து ஜப்பானியரை வசஞ்செய்தல் முடியும்; ஆனால் ரூஷியரும் சேர்ந்துவிட்டால் உலகயுத்தம் விரைவில் முடிந்துபோமென்றதுதான் [illegible] கொண்ட நம்பிக்கை. [illegible] பிருத்தானியர் [illegible] யுத்தத்தில் ஜர்மனியருக்கு மாறாக அமெரிக்கருடன் ஒத்துழைப்பதுபோல், ஜப்பானிய யுத்தத்தில் அமெரிக்கருடன் மனப்பூர்வமான ஒத்துழைக்கமாட்டாரென்று

உண்மையல்லாத ஒரு கதையை அமெரிக்க பத்திரிகைகள் சில வெளியிட்டுவிட்டனவாம்; இந்தக்கூற்று சிறிதும் பொருந்தாக்கூற்றாகும். ஜப்பானியருடன் மாறுபட்டமையினால் அதிக நஷ்டமடைந்தவர்கள் அமெரிக்கரல்லர்; பிருத்தானியரும் பிருத்தானிய சக்கராதிபத்தியத்துட்பட்டுள்ள இலங்கை மக்களும் இலங்கைமக்களுள்ளும் பிரதானமாக யாழ்ப்பாணத்து மக்களுமேயாவரென்பது உலகப்பிரசித்தம், பர்மா தேசம், சிங்கப்பூர், ஹொங்கொங், சீனத்திலுள்ள சில துறைமுகங்கள் முதலிய இவைகளையெல்லாம் தங்களிடங் கவர்ந்து ஜப்பானியர் வைத்து ஆளவிடுத்துப் பிருத்தானியரா வாளா பார்த்துக் கொண்டிருப்பவர்கள்? ஒருபோது பிருத்தானியர் அதிவிரைவில் இவைகளைத் திருப்பிப் பிடிக்காவிட்டாலும் ஒரு குறித்த காலத்தினுள் இவைகளையெல்லாம் மீட்டுப் பிடித்து ஜப்பானியரை அடக்கி உலக சமாதானத்தை நிலைநாட்டி வைப்பரென நாமதிப்பாது காத்திருக்கவேண்டும்.

## கோயில்களில் ஆடு கோழி வெட்டுதல்

இந்த யாழ்ப்பாணத்திலே மிகச் சிலவினுஞ் சில கோயில்களிலே ஆடு கோழிகளைப் பலியிடுதலாகிய அக்கிரமச் செயல் பாமர சனங்களாற் செய்யப்பட்டு வந்தது; ஆனால் நாளடைவில் சீவகாருண்யமற்றதும் சைவத்திற்கு நேர்விரோதமானதுமாகிய இச் செயல் தவிர்க்கப்பட்டு வருதல் எவர்க்கும் அடங்கா மகிழ்ச்சியைத் தருகின்றது; அராலியிலுள்ள அம்மன் கோவிலில் இற்றைக்கு ஆறாண்டு வருடங்கட்கு முந்திய ஆடு கோழி வெட்டுதல் அக்கோயிலதிகாரியினால் தவிர்க்கப்பட்டதென்பதை அச்சமயத்தில் ஓர் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுக் குறித்த கோயிலதிகாரியின் செயலை, பலியிடப்படும் மூவர் கோயிலதிகாரிகளும் பின்பற்றவேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தோம். இப்பொழுது வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சங்கரத்தையிலுள்ள பத்திரகாளிதேவி கோயில் அதிகாரிகளாகவுள்ள புண்ணியவாளர் மூவர் தங்கள் கோவிலிலும் இனிமேல் ஆடு கோழி வெட்டுவதில்லையென்று கருத்தமைந்த ஒரு அறிவித்தல் [illegible] வெளியிட்டிருக்கிறார்கள்; "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லாவுயிருந் தொழும்" என்றபிரகாரம் இந்த மூவரையும் சைவமக்கள் மாத்திரம் போற்றுவதோடு அமையாது சகல சீவராசிகளும் போற்றுமன்றோ; தருமதேவதையும் இவர்களுக்கு அருள்புரியுமல்லவா? பலிவெட்டப்படும் கோயில்கள் இன்னும் ஏதும் இந்த யாழ்ப்பாணத்திலே இலங்கையின் ஏனைய பாகங்களிலே உண்டாயின் அக்கோயில்களின் அதிகாரிகளும் இவர்களைப் பின்பற்றி ஈடேறுவார்களாக, கொல்லாமை எத்தனையோ [illegible] தருமமே.

## ஐக்கியசங்க வியாபாரம்

"சென்ற சித்திரையுடன் முடிவடைந்த ஒரு வருடமாக, ஐக்கிய சங்கப் பண்டசாலைகள் ரூபா 3,600,000 பெறுமதியான உள்ளூர்ப் பொருட்களை இலங்கையில் விற்றிருக்கிறார்கள்" என்று ஸ்ரீ. ஜி. டீ. சொய்ஸா ஒரு பத்திரிகை நிருபருக்குக் கூறியுள்ளார்.

"மேலும் இலங்கையில் யுத்தம் முடிந்தவுடன் ஐக்கிய சங்கப் பண்டகசாலைகளின் வருங்காலம் மிகவும் உன்னதமானதாகவும் இருக்கும். இன்று ஐக்கியசங்கப் பண்டகசாலைகளில் யாவரும் சேர்வதும் [illegible] நாட்டில் நடக்கும் மோசமான சோரச்சந்தை வியாபாரத்தாலதான்!

## மீண்டும் பறக்கும் குண்டுப் பிரயோகம்

லண்டன் செப் 16—

இன்று விடிவதற்குச் சற்றுமுன்பதாக லண்டன் பட்டணத்திலும் மற்றும் இங்கிலாந்தின் தெற்குப் பிரதேசங்களிலும் ஜெர்மானியர் பறக்கும் குண்டுகளைப் பிரயோகித்தனர். பொருட்சேதமும் சனச்சேதமும் உண்டாம்.

## சிங்கள மகாசபைத் தலைவருக்கு அதிகாரம்

சென்ற சனிக்கிழமை கூடிய சிங்கள மகாசபையின் நிர்வாகசபை திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களுக்கு இச்சபையின் சார்பாக இலங்கை அரசியல் மற்ற அங்கத்தவர்கள் தற்போது யாவருக்கும் சம்மதமான ஓர் அரசியல் திட்டத்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் பங்கெடுப்பதற்குச் சகல உரிமையும் அதிகாரமும் அளித்திருக்கிறார்கள்.

## பிறெஸ்ட் பிடிபட்டது

பாரிஸ் றேடியோ, பிறெஸ்ட் நகரம் 12000 ஜெர்மனியருடன் பிடிபட்டுவிட்டதாகச் சென்ற சனிக்கிழமை அறிவித்தது.

## ஸீஸ்பிறிட் அரண்கள் கைப்பற்றப்பட்டது

அநேகம் ஸீஸ்பிறீட் அரண்களை அமெரிக்க சைனியங்கள் கைப்பற்றியுள்ளார்கள்.

## 10,000 ஜப்பானியர் தற்கொலை

லாஸ் ஏஞ்சல்ஸ், செப் 13

சமீபத்தில பசுபிக்கில சைபானைப் பிடிப்பதில பங்கெடுத்துக் கொண்ட கேப்டன் ஸ்பெர்லிங் பின்வருமாறு கூறினார்:-

"சைபானில் 10,000 ஜப்பானியர்கள் போக வழியின்றிச் சிக்கினர். இவர்கள் எல்லாரும் தற்கொலை செய்து கொண்டனர். புருஷர்கள் தங்கள் மனைவிகளின் கழுத்தை வெட்டினர்கள், தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைக் கத்தியால் குத்திக் கொன்றனர். சிலர் தற்கொலை செய்து கொண்டனர்."

## பிரான்ஸில் சோரச் சந்தை

பிரான்ஸில் சோரச்சந்தை மிகவும் ஈனஸ்திதியை யடைந்துவிட்டதாகவும் ஒரு உடுப்பு 100 பவுணாகவும், ஒரு சோடி சப்பாத்து 40 பவுணாகவும் சீனி ரூபா 5½ ஆகவும் விற்கப்படுகிறதாம். ஒரு சிகரெட்டிற்கு ஒரு பவுணும் கொடுக்கிறார்களாம் என்று ஆலன் மூர்ஹெட் என்பவர் ஒரு பத்திரிகைச் செய்தி விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

தெல்லியூர் நடராஜன்

முயற்சி என்பது நன்மை பயக்குமெனத் தெரியும் செயல்களைச் செய்து முடிக்கவேண்டுமெனும் ஒருவகை மனக்கிளர்ச்சியாகும். செய்யவேண்டிய கருமங்களை மனமும் சரீரமும் சோம்புதலில்லாது செய்யவேண்டும். மனமுயற்சியும் சரீர முயற்சியும் ஒன்றுபட்டு இயங்கின் நாம் இம்மை மறுமையின்பங்களை அடையலாகும். நாம் எல்லாப் பெருமைகளையும் அடைதற்கேதுவாகிய கல்வியைக் கற்றற்கும் பொருளை ஈட்டுதற்கும் முயற்சியே சிறந்த கருவி. பெருஞ் செல்வராயினும் உள்ளக் கிளர்ச்சியாய முயற்சி இலராயின், சிறப்படையார். முயற்சியுடையவர் பொருளில்லாதபோதிலும் உள்ளவரோ டொக்கப்படுவர். தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்,

"தெய்வத்தா லாகாதெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலிதரும்"

எனத் தமிழ்மறையிற் கூறியாங்கு ஒருவன் தக்கபடி தன்னாற் கூடியளவு மிகுந்த பிரயாசையுடன் முயற்சி செய்வானேயானால் அவன் அதற்குரிய பலனை அடைவான்.

முயற்சியுடையவர்கள் தம் முயற்சியிலேயே கண்ணுயிருப்பர். அவர் ஒருமுறை தோல்வியடையினும் அதில் அவர் தளர்ச்சியடையாது மனவுறுதியுடன் பின்னும் பின்னும் முயன்று சித்தியெய்தும் வரையும் சலியாது உழைப்பர். இவர்கட்கு ஊக்கம் வேண்டும். ஒருவனுக்கு மனவெழுச்சி யுடைமையே நிலைபெற்ற உடைமையாகும், மற்றப் பொருளுடைமை நிலையற்றது. இதனைச் செந்நாப் போதர்

"உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்" [ளுடைமை

எனக் கூறுகின்றார். முயற்சி யுடையவர்,

"மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்"

எனக் குமரகுருபரர் நீதிநெறிவிளக்கத்திற் கூறியவண்ணம் நடப்பார்கள்.

"இசையா தெனினு மியற்றி யோராற்று
லசையாது நிற்பதா மாண்மை—இசையுங்காற்
கண்டல் திரையலைக்கும் கானலந் தண்சேர்ப்பப்
பெண்டிரும் வாழாரோ மற்று"

என நாலடியாரில் சமண முனிவர்கள் கூறியதை ஆராய்வாம். அவர்கள் பாண்டியனை விழித்து, "தொடங்கிய கருமம் எளிதில் முடியாதாயினும் விடாமல் முயற்சி செய்து ஒரு வகையாலும் தளராமல் நிலைபெற்று நிற்பது ஆண் தன்மை. அங்ஙனமின்றி எளிதில் எல்லாம் செய்வதானால் பெண்களும் மேன்மை பெற மாட்டுவர்" எனக் கூறினர். இதனால் தொடங்கிய எக்கருமத்தையும் அதனில் இடையில் தளர்வுறாது செவ்வனே முயன்று இறுதிவரையும் செய்தல் வேண்டும்.

ஒரு புலியானது தனக்குச் சிறந்த ஆகாரமில்லாத காலத்தில் சிறிய தவளையையும் பிடித்துப் புசிக்கும். அதுபோல தன் அறிவினாலே கிடைத்த தொழிலைக் காலாற் செய்யும் சிறு தொழிலென்று அலட்சியஞ் செய்யாது அச் சிறு தொழிலைச் செய்து வந்தால் பாரிய தொழில்கள் கிடைக்கும். இதனை சாரதையடக்கிய பாவொன்று நாலடியாரிற் கூறப்பட்டுள்ளது.

"உறுபுலி யூனிரையின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னு—மறிவினாற்
காற்றொழி லென்று கருதற் கையினான்
மேற்றொழிலு மாங்கே மிகும்."

இக்காலத்தில் அநேகர், மத்தியகால மேலைத்தேசங்களில் நடந்ததுபோன்று 'நாம் செய்யுந் தொழில் எம் கௌரவத்தைப் பாதிக்கும். ஆனபடியால் அதைச் செய்யப்படாது, மேலான தொழில்களே நாம் செய்ய வேண்டும்" என எண்ணுகின்றனர். சிலர் அவற்றினை எண்ணுவதுடன் நில்லாது பிறரையும் பரிகசிக்கின்றனர். அன்னார் தமக்கு வேறொரு முயற்சியுமின்றி இதனையே தம முயற்சியாகக் கொண்டு காலத்தை வீணே கழிக்கின்றவராவர். இன்னார்

"தீங்கரும் பீன்ற திரள்காலுளையவரி
தேங்கமழ் நாற்றமிழந்தா அங்—கோங்கு
முயர்குடியுட் பிறப்பி னென்னும் பெயர் பொறிக்கும்
பேராண் மையில்லாக் கடை"

எனும் நாலடியாரை அறிந்தால் அப்படிக் கர்வங் கொள்ளமாட்டார்கள். மத்தியகாலத்தில் மேலைத்தேசத்தினரின் தன்மைகளை அடிசன் (Addison) எனும் பேரறிஞர் பலருமறிந்து உய்யும் பொருட்டுப் பத்திரிகை வாயிலாக மக்களுக்குப் புகட்டி வந்தார். இதனால் நாளடைவில் குடிப்பிறப்பிற்கும் முயற்சிக்கும் ஒருவித தொடர்பும் அற்றுப் போயது. எக்குடிப் பிறந்தாலும் எல்லாவிதமான தொழிலையும் அவர்கள் செய்து வருகிறார்கள். ஆனால் பண்டு தொட்டு முயற்சியிற் பின்னடையா எம்மனோர் ஏனோ இப்பொழுது இம்முறையிற் பின்னடைகின்றனர்!

இவ்வுலகத்தில் ஒருவர் செல்வமடைய வேண்டுமானால் முயற்சியுடையாராக இருந்தாலே அவர் அதை அடையலாகும்.

"ஆக்கமிங் கொருவரா லணுகவேண்டுமேல்
ஊக்க முண்டாவரேல் உறுவ தன்னது;
நீக்கமில் கொள்கையில் நிற்பரேயெனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்"

எனக் கந்தபுராணத்திற் கூறியவண்ணம் ஒருவர் குற்றமற்ற நிலையில் முயற்சி செய்வாராகில் விரைவிலே உயர்ந்த பெருஞ் செல்வத்தினையடைவர்.

"மாண்ட னொருவன் தனக்கருஞ் செல்வம்
வாய்க்க வென்றனு தினமுயற்சி
தானுஞற்று வனேற் கடவுளு மதனைத்
தந்தளிக்குவன்; அதாலன்றோ
ஆனபேரறிஞர், 'திருவினை முயற்சி
யாக்குமு; அமமுயற்சி யிலாமை
யினமா ரினமை புகுத்தி விடுமால்'
என்று
யாரு நன்குணர்தா நவிலவார்?"

எனக் குசேல பாக்கியானத்திற் கூறியபடி ஒருவன் தனக்கு செல்வம் வேணுமென்று அனுதினமும் முயற்சி செய்தால் அவனுக்கு இறைவனும் இரங்கி அருள் செய்வார். ஆனால் ஒருவனை முயற்சி செல்வ[illegible] யில்லை[illegible] அவனை வறுமை யெனும் சாகரத்தினை அமிழ்த்தி விடும்' எனக் கூறுவர். ஆதலின் ஒவ்வொருவருக்கும் முயற்சி அவசியம். இடைவிடாது முயற்சி செய்வோர் பயனை விலக்குவதாகிய ஊழையும் விலக்குவார். இதனை

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

எனுங் குறட்பாவா லறியலாகும்.

முயற்சியுடையவர் அதனால்விளையும் இன்பத்தை நோக்காது தாம் முயன்ற தொழிலின் முடிவையே நோக்குவர். முயற்சி யில்லாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால், மாந்தருங் கடையாய் எல்லோராலும் இகழப்படுவர். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் மேலோர் வாக்குப்படி ஒருவன் முயற்சி யுடையானாக இருந்தால் அவனை ஒருவராலும் இகழப்படமாட்டான்.

# கடவுள் விருப்புவெறுப்பு இல்லாதவர்

(குகதாசர் ச. சபாரத்தின முதலியார் எழுதிய கட்டுரை)

விருப்பென்பது ஒருவன் தனது அனுபவம் நோக்கி அழியத்தக்கதாகிய ஏதேனுமொரு பொருளினிடத்தே கொள்ளும் இச்சையாம். இந்த இச்சை மாயாசம்பந்தம்பற்றி உண்டாவது. உண்மையை ஊன்றிப் பார்க்குமிடத்து மாயையில் தோன்றும் பொருள்களிற் கொள்ளப்படும் இச்சையே விருப்பெனப்படுமாம். விருப்பு உளதாகவே வெறுப்பும் உளதாகும். வெறுப்பு இல்லையேல் விருப்பும் இலதாகும். யாதொரு பொருளில் வெறுப்புக் கொள்வோனே, மற்றொரு பொருளில் விருப்புக் கொள்பவனுமாவன். ஆகவே, விருப்பும் வெறுப்புமாகிய இரண்டும் மாயாவரைப்பி னுட்பட்டார்க்குரிய குணங்களாம். கடவுள் மாயா வரைப்பைக் கடந்து "அப்பாலைக் கப்பாலாயுள்ளார்" ஆதலின் அவரிடத்தே விருப்பு வெறுப்புச் சிறிதாவது கேட்கப்படுவது கூடாது.

கடவுளிடத்தே விருப்புவெறுப்புகள் உளவாமாயின், அந்த விருப்பு வெறுப்புகள் காரணமாக, அவர்பால் இன்ப துன்பங்களும், அந்த இன்பதுன்பங்கள்காரணமாக அவர்பால் விகாரத்துவமும், அந்த விகாரத்துவம் காரணமாக அவர்பால் பிறப்பு இறப்புகளும் கேட்கப்பட்டு அவருடைய தெய்வத்துவம் அழிவுற்றிடும். ஆகவே அவர் விருப்பு வெறுப்புஇல்லாதவரெனப்படு ஆணித்தரமாட்டப்படும். விருப்பு வெறுப்புள்ளனவெல்லாம் சடப்பொருள்களாதலின், கடவுளும் சடப்பொருள்களுள் ஒன்றாக வைத்து எண்ணப்படுதற் குரியரோவெனின் அற்றன்று. இந்த மாயா வரைப்பினுட்பட்ட பொருள்களை நோக்குமிடத்து மாத்திரமே அவற்றுட் சடப்பொருள்களாயுள்ளன விருப்பு வெறுப்பு வாவப்பெறா எனவும் சித்துப்பொருள்கள் அறிவாற்றலுடையனவாதலால், அந்த அறிவின் காரியமாகிய விருப்பு வெறுப்புகள் வாவப்பெறுமெனவும் சாத்திரங்கள் சாற்றுகும். இந்த நியதி மாயா வரைப்பைக் கடந்த கடவுளுக்குரியதொன்றல்ல. கடவுள் மாயா நிலையத்தைக் கடந்து அப்பால் விளங்குபவராதலின், அவர்பால் விருப்பு வெறுப்புகள் கேட்கப்படுவதுமல்ல; அதுபற்றி அவர் சடப்பொருளாவதுமில்லை. அவருடைய சைதன்னிய சத்தி அறிவெனப்படுவதுமில்லை. அவருடைய ஆனந்தசத்தி எல்லாப்பொருள்களையும் இருந்தாங்கிருந்து தனையிடலயாமை எங்கும் கண்டுகொண்டிருப்பது. அது யாதொரு பொருளைச் சுட்டி அறிவதன்று; ஆனதுபற்றியே அந்தச் சைதன்னிய சத்தி பேரறிவு அல்லது முற்றறிவு என்று சாத்திரங்களில் எடுத்துப் பேசப்படும், மாயா வரைப்பினுட்பட்டோரது அறிவு சுட்டறிவு அல்லது சிற்றறிவு எனப்படும். கடவுளுடைய சைதன்னிய விளக்கம் பேரறிவு எனப்படுமாதலால், அந்த விளக்கத்தின்கண்ணே அழிதன் மாலையவாய்த் துக்கமோங்கட்கிடனாகிய விருப்பு வெறுப்புகள் கேட்கப்படுவது சிறிதுமில்லையெனக.

கடவுள் விருப்பு வெறுப்பு இல்லாரயினும் அவர் நித்தியானந்தர் எனப்படுவர். ஆனந்தமும் விருப்பும் ஒரு பொருளனவல்ல. அவை பொருள் அளவால் தம்முள் மிகப் பேதமுற்றிடும். ஆனந்தம் துன்பக் கலப்புச்சிறிதுமில்லாதோர் நிரதிசயநிலை. விருப்புத் துன்பத்தைஅவாவி நிற்பதோர் மயக்க நிலை. வெறுப்பின்றி விருப்பு உளதாதல் கூடாதென்பது மேலே எடுத்து விளக்கப்பட்டது. வெறுப்பினை இன்றியமையாத துணையாகக் கொண்டே விருப்பு நிகழ்வது. ஆனந்தம் அங்ஙனமானதன்று, அது என்றும் ஒருபெற்றித்தாய் யாதொரு பொருளின் துணையை ஒரு சிறிதாவது வேண்டாது பரிபூரணமாய் நிறைந்து வழிந்துகொண்டிருப்பது. இந்த ஆனந்தத்தை அனுபவிக்கும்பெரும்பேறு தானே பேரின்பமாகிய முத்தியின்பம் எனப்படுவது.

கடவுள் விருப்பில்லாராயின் ஆன்மாக்கள் முத்தியடைதல் வேண்டுமென்னும் விருப்பமும், அவர்பால் நிகழ்தல் இல்லையோவெனின், இது மாயா வரைப்பைக் கடந்த அவருடைய ஆனந்த அருள்நிலைக்குரியதன்றி மாயாவரைப்பினுட்பட்ட விருப்பமாகாதாம. இது மாயா வரைப்பினுட்பட்ட விருப்புகள் போல யாதொரு காலத்தில் தோன்றி யாதொரு காலத்திற் அழிவதன்று. இது என்றும் ஒரு பெற்றித்தாய் கடவுளோடு உடனியைந்து பரிபூரணமாகச் சொலித்துக்கொண்டிருப்பது. இது இங்ஙனம் எக்காலத்தும் நீக்கமின்றிக் கடவுளோடு நிறைந்திருத்தல் பற்றியே, திவ்விய சமயமாகிய எமது சமயம் ஆன்மாக்களெல்லாம் ஒரு காலத்திலே ஒன்றொழியாது முத்தியிற் சார்ந்து பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்குமென்று வற்புறுத்திச் சாதிக்கும். இந்தஆனந்த அருள்நிலை, மாயாவரைப்பினுட்பட்டுக் காலாந்தரங்களில் அழிதல் மாலைத்தாகிய விருப்பன்றாகலின், இவ்விருப்பாவது இதனுக்கு மறுதலையாயுள்ள வெறுப்பாவது கடவுளிடத்தே ஒரு சற்றேனும் கேட்கப்படுமாறில்லையென்று எங்கள் திவ்வியாகமங்கள் எடுத்து விளக்கும். இது விருப்பெனப்படுவதுண்டானால், இந்த விருப்பு முற்றுப் பெறுமைபற்றி, பெத்த நிலைக்கணுள்ள ஆன்மாக்களை நோக்கிக் கடவுளுக்குத் துக்கமும் உளதாதல் வேண்டும். இது விருப்பாகாது ஆனந்தமாதல் பற்றியே, பெத்தராயாக்களை நோக்கியும் கடவுளுக்கு ஆனந்தமன்றித் துக்கம் ஒரு சிறிதேனு மில்லையென்று எமது சமய சாத்திரங்கள் நுட்பமுற எடுத்து விளக்கும்.

## உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலைப் பெற்றோர்தின விழா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையாரின் பரிபாலனத்திலுள்ள இவ்வித்தியாசாலையில் பெற்றோர்தினக் கொண்டாட்டமும் பரிசளிப்பு விழாவும் சென்ற ஆவணி மாதம் 25ம் திகதி 9-9-44 சனிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் 10½ மணி வரையில் மேற்படி வித்தியாசாலை வளவின்கண் அமைக்கப்பெற்ற பந்தரில் வடமாகாண அதிபர் திருவாளர் C. குமாரசுவாமி அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தில் நடைபெற்றது. அவ்வமையம் பிரபலஸ்தர்கள் பலரும் பெற்றோர்களும் ஊரவர்களுமடங்கிய பெரிய சனத்திரள் குழுமியிருந்தது,

தலைவர் பாடசாலைக்கு வந்ததும் பாடசாலைவாயிலிலிருந்து மேளவாத்தியத்துடன் பந்தருக்கு அழைத்து அங்கு தலைமை ஆசிரியர் அவர்களால் மாலைசூட்டப்பட்டனர், பின்னர் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. பின்னர் தலைமை ஆசிரியரால் பாடசாலை அறிக்கை வாசிக்கப்பட்டது, அதன் பின் மாணவர் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. 'இக்காலப் பஞ்சநிலை' என்னும் விஷயம்பற்றி 7ம் (ஏழாம்) வகுப்பு மாணவனாலும் 'தமிழ்மொழி' என்னும் விஷயம்பற்றி 6ம் (ஆறாம்) வகுப்பு மாணவியாலும் இரு அரிய உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. மாணவச் சிறுமியர் பதின்மர் ஓர் இனிய அபிநயப்பாட்டை மிகவும் இனிமையாகப் படித்தனர். மேலவகுப்பு மாணவர் மூவர் யோகாசன அப்பியாசங்கள் பலவற்றை மிகத் திறம்படச் செய்து காட்டினர். சிறுமியர் பலர் சேர்ந்து சிறந்த காளிங்க நர்த்தனம் புரிந்தனர்.

பின்னர்த் தலைவர் அவர்களின் பாரியாரால் பரிசுகள் வழங்கப்பட்டன. அதன்பின் இக்கூட்டத்திற்குப் பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்த பெரியார்கள் சொற்பொழிவாற்றினர். முதலிற் பேசிய வட பெரும்பாகவத்தியாதிகாரி திரு. V. K. நாதன் அவர்கள் (B. A., F.R. G. S) மாணவரின் நிகழ்ச்சிகள் எல்லாம் சிறப்பாயிருந்தனவென்றும் 'இக்காலப் பஞ்சநிலை' என்ற பேச்சு மிகவும் உயர்தரமானதென்றும், இன்னும் பாடசாலை வேலைகளைப்பற்றிப் பலபட விதந்தும் கூறினார்.

பின்னர் உரும்பராய் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் பிரமஸ்ரீ சீதாராம ஐயர் அவர்கள் இப்பாடசாலையின் ஆரம்பம் வளர்ச்சி என்ற விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசியபின்னர் பாடசாலைக் கிணற்றுத் தண்ணீர் போதாமையால் இப்பாடசாலைக் கிணற்றை ஆழமாய் வெட்ட வேண்டியதன் அவசியத்தைச் சபைக்குக் கூறப் பெற்றோர்கள் அதற்கு ஆதரவு அளிக்க வேண்டுமெனப் பரிந்து கேட்டுக்கொண்டனர். பின்னர் முதலியார் பொன்னம்பலம் அவர்கள் தலைவர் அவர்களைப் பற்றியும் பாடசாலையைப் பற்றியும் சில விசேஷ குறிப்புக்களை கூறினார். அதன்பின் தலைவர் அவர்கள் இடையில் விட்டுச் செல்ல வேண்டியிருந்தமையால் தமது முடிவுரை நிகழ்த்துகையில் மாணவரின் நிகழ்ச்சிகளைப்பற்றி மிகவும் பாராட்டியதோடு 'இக்காலப் பஞ்சநிலை' என்ற விஷயத்தை ஆசிரியர்கள் மாணவர்களைக்கொண்டு பேசுவித்தமை இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமானதென்பதைச் சபைக்கு எடுத்துக் காட்டினார். பின்னர் தலைமை ஆசிரியர் வடமாகாண அதிபர் அவர்கட்கும் பாரியாருக்கும் திரு. V. K. நாதன் அவர்கட்கும்

பாரியாருக்கும் நன்றியுரை பகர அவர்கள் செல்லாநின்றனர்.

அதன்பின்னர் நாரதர் கலகம் என்னும் நாடகம் பெற்றோரும் மற்றோரும் மகிழ மாணவர்களால் மிகவும் சிறப்பாக நடித்துக் காண்பிக்கப்பட்டது.

இறுதியில் தலைமை ஆசிரியர் அவர்கள் முதலியார் பொன்னம்பலம் பிரமஸ்ரீ சீதாராமஐயர் ஆகிய பேச்சாளர் இருவர்கட்கும் சபையோர்க்கும், தமது அன்பார்ந்த உதவியை மனமுவந்து ஆசிரியர்களித்து விழாவைச் சிறப்பித்த இவ்வூர் இளைஞர்கட்கும் நன்றியறிதல் கூறிக்கொண்டனர்.

—சுதேசி.

## மனிதன் தேவனாகும் யோகமார்க்கத்தைப் போதிக்கும் பகவான் அரவிந்தர்

### அவரது வாழ்க்கைவரலாறும் யோகசித்தியும்

(சென்ற மாதம் 5—8—44 கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடந்த அரவிந்தர் ஜயந்தியில் திரு. க. இராமச்சந்திரன் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவி வரையப்பட்டது)

(முற்றொடர்)

அன்னையின் பணியை பயன்கருதாது ஆர்வத்துடன் செய்தால், அவள் வினையவற்றையெல்லாம் சரிவர நடத்துவாள் என்ற ஆசையற்ற நம்பிக்கையுடன், அவள் திருப்பாதங்களில் சரண்புகுதலே அரவிந்தரின் சொந்தச் சாதனையும் அடியார்க்கு அவர் அருளும் நெறியுமாகும். அவர் ஆதிபராசக்தியை ஜகன்மாதாவாகப் பாவிக்குமுன் பாரததேவியாகவே வழிபட்டுள்ளார். குமரிமுனை தொட்டுக் கௌரிகுண்டம் வரைக்கும் பரந்துள்ள நிலப்பரப்பு அவர் காட்சிக்கு ஆரியாக்கண்டத்திலுள்ள ஓர் தேசமாகத் தோற்றியதே கிடையாது. 'ஐரோப்பா போகபூமி. பாரதநாடு தியாகபூமி. பாரதவாசி தெய்வத்தன்மையுள்ளவன்'' என்று கூறி, பாரததேசம் விடுதலையடைந்தால்தான் உலகம் விடுதலையடைய முடியுமென வற்புறுத்துகின்றார். அவரின் தவம் ஆரம்பித்தது இக்கோரிக்கையுடனேயாம்.

ஐக்கியாநுபூதியில் பரமேஸ்வரி, புவனேஸ்வரி, ஜீவேஸ்வரி யென்ற மூன்று அவஸ்தைகளாகக் காட்சியளிக்கும் அன்னையானவள் உலகலீலைக்காகக் கொள்ளும் மூர்த்தங்கள் பல. அவற்றுள் முக்கியமானவற்றை அரவிந்தர் நான்கு மஹாமூர்த்தங்களாக விளக்குகிறார். பூரணஞானம், பேரறிவு, சாந்த, அமைதி, அளப்பிலாக் கருணையாகத் தோன்றும்போது மகேஸ்வரியாகிறாள். ஆற்றல், சீற்றம், வெற்றி, வீரம், வேகம், அழிவு, அகோரம் முதலாம் குணங்களை வெளிப்படுத்துதலால் மகாகாளியென்னும் நாமம் பெறுகிறாள். எச்சண்டைக்கும் பின்வாங்காத இச்சண்டிமூர்த்தம் இல்லையேல், உலக பாரும் வஷயத்தில் ஒருநாளில் முடியவேண்டிய வேலை பல நூற்றாண்டுகள் எடுக்கலாம். தற்போதைய அகோர யுத்தம் அதற்கு ஓர் ஒப்பற்ற உதாரணமாகும். அழகு, இனிமை, இன்பம், லாவண்யம், மங்கலம் முதலாம் குணங்களையும்போது மகாலட்சுமி ஆகிறாள். மேலான அறிவு, ஒழுங்கு, சட்டதிட்டம், வழிநுட்பம், கைத்தேர்ச்சி, வாக்குவல்லமை முதலாந் தன்மைகளை விளக்கும்போது மகாசரஸ்வதியாகிறாள். நால்வருள் இளையவள் இவளே. எம்முடைய எமது பரிணாம வளர்ச்சிக்காகப் பொறுமையுடன் நீடித்தகாலம் பாடுபடுபவளும் இவளே. விரிய விபரங்களை அரவிந்தர் அருளிய 'அன்னை' என்னும் நூலிற் காணலாம்.

யோகி அரவிந்தர் ஈடுபட்டிருக்கும் தொண்டு சித்திமார்க்கப்பணியென்றும் அவர் தென்னாடு வாரா ... அப்பணி செவ்வனே நடைபெற்றிராதெனவும் முன்னரேயே குறிப்பிட்டோம். ஞானியை ஞானியே அறிவான். யோகியை இன்னுமோர் யோகியால்தான் விளங்கமுடியும். தமிழரின் தவப்பயனாகத் தோன்றி தமிழ்ப்பணியே தம் தவமாகக் கொண்டு தனிமோனத்துறையும் சுவாமி சுத்தானந்த பாரதியார் பகவான் அரவிந்தரை ஓர் சித்தனென்றே உலகிற்கு விளக்குகிறார். அதுவும் எவ்வித சித்தன் என்கிறார்? அருள் செழித்த அறிவு; அறிவு மலர்ந்த அன்பு; அன்பு பழுத்த அமுதம்; அமுதம் விளைந்த வாழ்வு; வாழ்வுதழைக்கும் யோகம்; யோகம் பொழியும் சக்தி; சக்தி விளங்கும் சித்தன்.'' என்றும், ''இந்தியா, ஆகம, தாந்திரிக, சித்த சூத்திரங்கள் முறையிட்டும் அமுத ஜீவன மார்க்கத்தை மறந்தேபோனது; வேதரிஷிகள் கண்டயோக—போக வாழ்வைத் துறந்துவிட்டது. மறுபடியும் அந்த வாழ்வை நமக்கு விளம்பூட்டி நடத்தும் சித்தபுருஷரே ஸ்ரீ அரவிந்தர்' என்றும் போற்றிப் புகழுகின்றார்.

பழைய சமய சாஸ்திரங்களில் உள்ள நன்மைகளைப் புதுப் பௌதிக சாஸ்திர ஆராய்ச்சி முறையில் கிடைத்துள்ள நன்மைகளுடன் ஒன்று சேர்த்து, அக்கலப்பால் மண்ணுலகவாழ்வை விண்ணுலக வாழ்வாகச் செழிக்கச் செய்வதே, அதாவது மனிதனைத் தேவனாக்குவதே, நரனை நாராயணனாக்குவதே, அரவிந்தயோகத்தின் நோக்கமாகும். இதில் கர்மம், பக்தி, யோகம், ஞானம் நான்கும் அடங்கியிருப்பதால் பூரணயோகம் என அழைக்கப்படுகிறது. ஏழடுக்கு மாளிகையான யோக விதானத்தில் நடுவே இருப்பது விஞ்ஞானமாடி. அதைத் தாண்டி அதற்கு மேலுள்ள ஆனந்தம், சித்து, சத்து ஆகிய மூன்றிலுமுள்ள அற்புத சக்திகளைக் கீழ்த்தட்டுகளுக்கு படிப்படியாக மனம், உயிர், உடல் ஆகிய கீழ்க்கோசங்களிற் பாயச் செய்வதே அதற்குரிய சாதனையாகும். இம்முறையில் மனிதனிடமுள்ள சிவ-சக்தி தத்துவங்களை ஒன்றுபடுத்துவதால் பெறும் சித்திகளுள் நித்தியதேகம், சாகா நிலையடைதலும் ஒன்றாகும். உருவண்டப்பகுதியென உலகமெல்லாம் புகழ்கின்ற திருவண்டப்பகுதி யென்னும் திருவகவலில், 'அற்புதமான அமுததாரைகள், எற்புத்துளைதொறும் ஏற்றினன், உருகுவதுள்ளங்கொண்டோர் உருச்செய்தாங்கே.... எனையும் இருப்பதாக்கினன்' என மணிவாசகப் பெருமான் குறித்ததும் இச்சாகா நிலையேயாம்.

ஆகையினால் அழியாதிருக்கும்படியான ஞானகர்மங்களுக்கு வேண்டிய அற்புதசக்திகள் உடலில் அமைக்கப்பட்டே நாம் பிறவியெடுத்துள்ளோம். அதுமாத்திரமன்று, நமது உள்ளத்தில் அளவற்ற ஆற்றலும், வரம்பிலா அறிவும், எல்லையிலா வல்லமையும், அந்தமிலா ஆனந்தமும், மட்டுக்கடங்காத அன்பும், ஆழ்ந்து புதைந்து கிடக்கின்றன, இவ்விதம் நம்மிடத்தில் உறங்கிக் கிடக்கும் சக்திகளையும் தெய்வத்தன்மையையும் நன்குணர்ந்து ஞான காமானுஷ்டானங்களால் சாகாநிலை அடைந்தவர்களே தாயுமானார் கூறியுள்ள நவநாத சித்தர்களெல்லாம், இந்த சித்திய .... போத ... பாடல்களிலும் தோத்திர நூல்களிலும், சிறப்பாக சைவாகமநூல்களுள் தலைசிறந்ததான திருமந்திரத்திலும் பரக்கக் காணலாம். 'இருந்தேன் இக்காயத்தே எண்ணிலகோடி, இருந்தேன் இராப்பகலற்றவிடத்தே' 'நாடவல்லார்க்கு நமனில்லைக் கேடில்லை, நாடவல்லார் நரபதியாய் நிற்பர்' 'நான்றவிழ் முட்டையிரண்டையுங் கட்டியிட்டுநின்றிருக்க உடலழியாதே' என்பனபோன்ற திருமூலர் வாக்குகளும் இங்கு கவனிக்கத்தக்கன. திருமூலரும் அரவிந்தர்போல உத்தரத்திலிருந்து 'நீலகண்டமேனியன் நேரிழையாளொடு, மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின், சீலாங்கவேதத்தைச் செப்புதற்கு' அதற்குரிய தென்றிசை நோக்கி சித்தரோ. நந்தியருள் பெற்றவர் தம்மோடு எண்மரான அவர்களுடத்தில், பதஞ்சலியையும் ஒருவராகக் கூறியுள்ளார் திருமூலர். பதஞ்சலி முனிவரும் தில்லையம்பலத்தில் திருநடனக் காட்சிபெற மதுரை நாட்டில் இருந்து வந்த யோகசித்தர்.

மேலே தக்க ஆதாரங்களுடன் எடுத்து யாம் விளக்கியபடி அரவிந்தர் பழைய சித்த மார்க்கத்தையே போதிப்பினும், அவர் தமது யோக சித்தியை அன்னியாக முனிவர்களைப் பற்றிக் கவின சாஸ்திர ரீதியாக உலகமொழியாம் ஆங்கிலத்தில் விளக்குவதால் ஓர் புதுமையையுஞ் சேர்த்துள்ளாரென்பதை எவரும் மறுக்கமுடியாது. தாம் எடுத்துக்கொண்ட மிக்க கடினமான தெய்வகாரியம் அன்னையின் அருளாலேதான் நிறைவேறமுடியும் என்பதே அவரது கொள்கை. அவர் இயற்றிய நூல்களுள் 'தேவஜீவனம்' (The Life Divine) என்பதை இவ்வையப்பெரும் சத்தியயுகத்தின் வேதமென அவரது அடியார்கள் பாராட்டுகிறார்கள். ஆங்கிலமொழியில் இதைப்போன்ற ஓர் அரியநூல் இதற்குமுன் வந்ததில்லை என்பதே அறிஞர் முடிபு. அதனை இப்போது யோக சுத்தானந்தர் தமிழில் மொழிபெயர்க்கிறார். இதுவரையில் அச்சில் வெளிவந்த முதல்பாகத்தின் அளவைக்கொண்டு கணிக்கும்போது, ஆங்கிலத்தில் 1047 பெரியபக்கங்கள் கொண்ட புத்தகம் தமிழில் 40 பக்கங்களுள் அடங்கிவிடும் போற் தோன்றுகிறது. எமது அமிழ்தினுமினிய தமிழ்மொழியின் தெய்வத்தன்மைக்குப் பிறதோர் அத்தாட்சியும் வேண்டுமோ?

உலகம் பொய், பெண் பேய், செல்வம் அலகை, வாழ்வு கனவு, என்ற வறட்டுத் துறவுக்கு அரவிந்தரின் பூரணயோகத்தில் இடங்கிடையாது. இறைவன் எவ்வளவுக்கு உண்மையோ அவ்வளவுக்கு அவனால் படைக்கப்பட்ட உலகும் உயிர்களும் உண்மைப்பொருள்கள் என்பதே அவரது கொள்கை. இறைவனின் உறைவிடமான, பிரமமயமான, உலகைவிட்டு விலகி, தனித்திருந்து சமாதியில் லயித்துத் தப்பித்துக்கொள்ளும் முத்திமட்டும் போதாது. எல்லாரும் ஒவ்வொருவருக்காகவும், ஒவ்வொருவரும் எல்லாருக்காகவும், அனைவரும் அன்னையின் பணிக்காகவும், அவளிடம் சரண்புகுந்த அதயாத்ம யோகவாழ்வில் ஈடுபட்டு, மாந்தர் வாழ்வை அமர வாழ்வாக மாற்ற வேண்டுமென்பதே பகவான் அரவிந்தரின் சித்தாந்தம்.

''வாழ்க அரவிந்தன்! வாழ்க பராசக்தி!
வல்லபன் வாழியவே!
வாழ்க மஹாயோகி! வாழ்க மகாஜோதி!
வாழ்க ஜகத்குருவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புக்கள்

சென்ற திங்கட்கிழமையன்று அமெரிக்க விமானங்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளைத் தாக்கி 200 ஜப்பானிய விமானங்களை அழித்தன வென்று பசுபிக்கடற்படைசேனாதிபதி அட்மிரல்நிமிட்ஸின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியான அறிக்கை கூறுகிறது.

0 0 0

"ஹாலிபாக்ஸ்" (லங்காஸ்டர்) விமானங்கள் வெள்ளிக்கிழமை கீல் நகரத்தைக் கடுமையாய்த் தாக்கின வாம்.

0 0 0

லண்டனில் பறக்கும் குண்டுத் தாக்குதலால் இதுவரை 1104000 வீடுகள் சேதமாயின வென்றும் 23000வீடுகள் நாசமாக்கப்பட்டன வென்றும் ஒரு லண்டன் நகரச் செய்தி கூறுகிறது.

0 0 0

தனநாயகமென்னும் வியாபாரிக்குச் சொந்தமான 4000 ரூபா பெறுமதியான காரொன்றை, கொட்டடி வாசியான வீரசிங்கம் என்பவர் களவாடினரென்று, சப் இன்ஸ்பெக்டர் R. W. M. உபயக்கோன் யாழ்ப்பாணம் நீதிஸ்தலத்தில் அவர்மீது ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

0 0 0

பிரிட்டிஷ் பிரதமமந்திரி சர்ச்சில் லண்டன் நகருக்குத் திரும்புவதற்கு உத்தேசித்திருக்கிறாரென்று ஒரு குவிபெக் நகரச் செய்தி கூறுகிறது.

0 0 0

அமெரிக்காவில் சூறாவளியினால் 21உயிர்ச் சேதமும் 3 கோடிடாலர் பொருட்சேதமும் ஏற்பட்டதென்று ஒரு நியூயார்க் நகரச் செய்தி அறிவித்தது.

0 0 0

பம்பாய் மாகாண காங்கிரஸ் நிர்வாகசபைக் காரியதரிசியும், கார்ப்பொரேஷன காங்கிரஸ்கட்சித் தலைவருமான ஸ்ரீ எஸ். கே. படில் என்பவரை, கொடி வணக்க வைபவத்தில் கலந்து கொள்ளுதவதற்காகச் சென்ற இடத்தில், சுற்றுப்புறப் பொலிஸார் கைது செய்தனரென்று பம்பாய்ச் செய்தி ஒன்று கூறுகிறது.

## இத்தாலியில் அமெரி

லண்டன் செப் 15—

நேசதேச எட்டாவது படையுடனிருக்கும் விசேஷ நிருபர் ஏ. கே. குவேர்ஷி இத்தாலியிலிருந்து அறிவிப்பதாவது:-எட்டாவது சைனியப்போர்முனையைச் சுற்றிப் பார்வையிடுவதை அமெரி முடித்துவிட்டார். அப்பொழுது அவர் இரண்டு இந்திய சைனியப் பகுதிகளைப் பார்வையிட்டார். அமெரி அவர்களிடம் உருதுவில் பேசினார். அவர் கூறியதாவது:- "ஜெர்மன யுத்தம் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பாவில் யுத்தம் முடிந்ததும் இந்திய துருப்புகள் இந்தியாவுக்கு கௌரவ புருஷர்களாக வீடுதிரும்புவார்கள்".

## குவாங்ஸி தலைநகரை நோக்கி 45000 ஜப்பானியர்

சுங்கிங் செப் 15—

மூன்று பிரிவுகளாக 45000 ஜப்பானியர்கள குவாங்ஸியின தலைநகராகிய குவெலினை நோக்கி வருகின்றனரென்றும் அவைகள் அந்நகரிலிருந்து 70 மைல் தூரத்துக்குள் வந்துவிட்டனவென்றும் ஒரு சீன இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

'ராம குவெலினை பாதுகாக்க முடியும் [illegible] [illegible]க்கின்றோம்' என்று அவர் மேலும் [illegible] வித்தார்.

## அறிவித்தல்

### சங்கரத்தைப் பத்திரகாளியம்மை கோவில்

இதனால் சகல அன்பர்களுக்கும் அறிவிப்பது: வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சங்கரத்தையிற் கோயில் கொண்டருளிய பத்திரகாளியம்மை கோவிலில், இதுகாறும் நடந்துவந்த காருண்யமற்ற கருமமாகிய ஆடு கோழி வெட்டிப் பலியிடுதலை மேற்படி கோயிலின் மனேஜர் (அதிகாரி) களாகிய நாங்கள் இன்று தொடக்கமாகத் தவிர்த்துவிட்டோமென்பதும், ஆனதால் அன்பர்கள் யாவரும் தங்கள் நேர்த்திக்கடன்களை வேறு தூயமுறையிற் செய்துகொள்ள வேண்டுமென்பதுமேயாம்.

இங்ஙனம்,
சி. இராசநாயகம்.
சி. தம்பிராசா.
ந. ஆறுமுகம்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
26—8—44.

Mis 116—18.9.44

### பொதுஜனப் பாதுகாப்புப்பகுதி கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

வருடாந்தக் கையிருப்பைக் கணக்கெடுப்பதற்காக எல்லாக் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனங்களும் (கொழும்பிலும் வெளியூர்களிலும்) 1944ம் ஆண்டு அக்டோபர்மாதம் 1ம் திகதிமுதல் 4ம் திகதிவரை (இருதினங்களும் உட்பட) மூடப்படும்.

இத்தினங்களில் கூட்டுறவு ஸ்டோர்களுக்கும் மற்றவர்களுக்கும் சாமான்கள் கொடுக்கப்படமாட்டா.

சி. ரகுநாதன்,
ஸீனியர் உதவி ரிஜிஸ்திரார்,
கூட்டுறவுச் சங்கங்கள்

கொழும்பு, 1—9—44.
G 68 18&21&25&28.9.44.

### விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

சாவகச்சேரி தாமோதரி பிரான்சிஸ் அல்லது தம்பையா வழக்காளி.

ஷை யூர் தாமோதரி கைம்பெண் மதலீனை பதில் வழக்காளி.

இல. 15398.

எதிர்.

1 ஷை யூர் சாமுவேல் முத்துத்தம்பி அரியரத்தினமும்,

2 மனைவி பராசத்திப்பிள்ளையும் எதிராளிகள்

இவ்வழக்குத் தீர்வையின் பேரால் எதிராளிகள் வழக்காளிக் கிறுக்க வேண்டிய ரூபா 810 ஐயும் இதற்கு 1942 ஞு வைகாசிமீ 13ந் திகதி தொடக்க மிறுக்கும்வரையும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியையும் செலவு ரூபா 100 ஐயும் அறவிட்ட ரூபா 600 ஐயும் செலவு ரூபா 100 ஐயும் நீக்கிய மிகுதியை அறவிடுதற்காக பின்சொல்லப்படும் ஆதனம் 1944ஆ ஐப்பசிமீ 9ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த காணியின் வடக்கெல்லை ஒழுங்கையில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

சாவகச்சேரியிறை சூரிமுதலி வளவும் சிவகுகின் வளவும் நி பா $6\frac{7}{8}$ எல்லைகிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு பொன்னம்பலம் பெண் வள்ளியம்மைக்கும் நல்லாச்சிப்பிள்ளையின் உரிமைக்காரருக்குமுரிய வாதனம், தெற்கு நாகலிங்கம் பெண் சரஸ்வதிப்பிள்ளைக்குரிய வாதனம், இக்காணியடங்கலும் பயிரும் கல்வீடும் கிணறும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும்.

இ. வேலுப்பிள்ளை
கொம்மிஷனர்

1944ஆ புரட்டாதி 14உ
Mis 114 18—9—44.

## தேகவியோகம்

### சிவப்பிரகாசம்

அரசாங்க கச்சேரிகளில் உயர்தர உத்தியோகம் வகித்திருந்து சிலகாலமாக இளைப்பாறி உபகார வேதனம் பெற்றுவந்தவராகிய திரு. க. சிவப்பிரகாசமவர்கள் தம்மைச் சிலகாலமாகப் பிடித்து வருத்திய நோய் காரணமாக, சென்ற வெள்ளிக்கிழமை அதிகாலையில், வண்ணார்பண்ணை குளங்கரையிலுள்ள தமது இல்லத்தில் தேகவியோகமாயினர். இவருக்கு இறக்கும்போது வயசு 62. இவருடைய இமக்கடன்கள் கோம்பயன்மணல் மயானத்தில் அடுத்தநாள் சுற்றமித்திரர் அயலார் பலர் சமுகத்தில விதிப்படி செய்யப்பட்டன. இவரையிழந்து துயருறும் மனைவி சுற்றத்தார் நிலைமை அநுதாபப்படத்தக்கது. இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

*

### அன்னபூரணியம்மாள்

வழக்கறிஞராகக் கொழும்பு கோட்டில் கருமமாற்றி வருபவராகிய திரு. ப. இராசரத்தினமவர்களின் பாரியாரும், வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி திரு. சி. சபாரத்தினமவர்களின் கனிஷ்டபுத்திரியுமாகிய ஸ்ரீமதி அன்னபூரணியம்மாள் சென்ற புதன்கிழமை (13-9-44) பிரசவகாலத் தெழுந்த சடுதிநோய் காரணமாக, தமது நாயகன், பிள்ளை, தாய், தந்தையர், சகோதரர், சுற்றமித்திராகிய எல்லாரும கதற அகால மரணமடைந்தனர். இவருக்கு இறக்கும்போது வயசு 32. இவருடைய அகாலமரணம் பெரிதும் இரங்கற்பாலதாகும். ஈமக்கிரியைகள பன்னூறுக்கணக்கான சுற்றமித்திரர் அயலார் சமுகத்தில் அடுத்தநாள பகல் பத்துமணிவரையில் கோம்பயன் மணல் மயானத்தில் விதிப்படி செய்யப்பட்டன. இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

*

### சிறந்த மேளவாத்திய வித்துவானின் பிரிவு

யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் இந்தியாவிலும் சிங்கப்பூர் மலாய் நாடுகளிலும் தவில் வித்துவான் என்று எவராலும் பாராட்டப்பெற்று வந்த திரு. நா. காமாட்சி சுந்தர மென்பவர் சென்ற வெள்ளிக்கிழமை தம்மைச் சிலகாலம் பிடித்து வருத்திய நோய்காரணமாக, வண்ணார்பண்ணை கிழக்கிலுள்ள தமது இல்லத்திற்றானே தேகவியோகமாயினர். இவருடைய அகால மரணம் சுற்றமித்திரர் அயலார் முதலியோர்க்கு மாத்திரமன்றிச் சங்கீதவுலகம் முழுவதற்கும் தீராக் கவலையைத் தருவதாகும். தவில் வாசிப்பதில் இவருடைய திறமையைக் கேள்வியுற்று, இந்தியாவிலுள்ள சிறந்த வாத்தியகாரராகிய திருவீழிமிழலை சகோதரரென்னு மிருவரும் தங்கட்கு இவரைத் தவில வாசிக்க வைத்ததும், பின்னர் மைசூர் அரசர் சமஸ்தான வாத்திய வித்துவான T. N. இராசரத்தினம்பிள்ளை யென்பவருக்குத் தவிற்காரராக இவர் இருந்ததையும் எவருமறிந்த விஷயம்; இப்படிப்பட்ட வித்துவான்கள தாம பிறந்த நாட்டிற்குப் பெருமை தேடுபவர்களன்றோ. இவரது ஈமக்கடன்கள் அடுத்த நாளாகிய சனிக்கிழமை நடைபெற்றன. இவரை யிழந்து தீராத்துயருறும மக்கள் மூவர், மனைவி, சகோதரர் ஏனைய சுற்றமித்திரர் அபிமானிகளோடு நமது அநுதாபமும் சேர்கின்றது. இவர் ஆன்மா சாந்தியடைவதாக.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### செவ்வாய் செப் 19

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி வி சிவலிங்கம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி ஆர் எஸ் மணி புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 பி ஆர் எஸ் மணி புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 ஆர் டி வி சிவலிங்கம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 புதிய வெளியீடுகள் 8 மதராசில் உள்ளபடி 9 அப்துல்கனி விதார் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஆங்கில நாடகம் 10 இசைவேளை 10-30 முடிவு.

### புதன் செப் 20

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வாத்யகதம்பம் 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-30கமலா நாகரத்தினம் பாட்டு 9 முடிவு.

1 இஸ்லாமிய துதிப்பாடல்கள்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கமலா நாகரத்தினம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30முடிவு.

மாலை: 5 திருவாளப் புத்தூர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 குரல்வகை† 6.15 இலக்கிய வாசகம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-10 இத்-உல்-பிதுர் பேச்சு 7-20 துதிப்பாடல்கள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 நம்பெண்டிரும் சட்டமும் பொது உரிமைகள் 8 திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை வயலின் 8-30 காணிக்கை நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஜீ ஐ ஆங்கிலம் 10 ஐரோப்பியசங்கீதம்† 10-30 முடிவு.

### வியாழன் செப் 21

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம் 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருக்கோகர்ணம் என். ராமச்சந்திரன் வீணை 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 பி எம் ஸரஸ்வதி அம்மா பாட்டு 2 தமிழில்செய்திகள் 2.05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 திருக்கோகர்ணம் என் ராமச்சந்திரன் வீணை 5-40 இசைப்பயிற்சி 6 பி எம் ஸரஸ்வதிஅம்மா பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7.15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி 8 சேலம ஜி தேசிகன் பாட்டு 9 ரேடியோநாடகஇசை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 நாளைய ஐரோப்பா 10 இசைவேளை† 10-30 முடிவு.

## ஆகாயத்திலிருந்தே புதையல் எடுக்கலாம்

யுத்தத்துக்குப் பிறகு என்னவெல்லாமோ அதிசயங்கள் நடைபெறவிருக்கின்றன. விமானங்கள் பறந்து செல்லுகையில் அவைகளுக்குக் கீழுள்ள பூமியில் தங்கம் இருக்கிறதா இல்லையா என்பதை விமானிகளுக்கு அவர்களுடைய விமானங்களே அறிவிக்க முடியுமென அமெரிக்க விஞ்ஞான சாஸ்திரிபுணர் ஒருவர் தெரிவிக்கிறார்.

விமானிகள் அமர்ந்து கொள்ளக் கூடிய இடத்தில் அமைக்கப்படும் நூதனக் கருவி பூமியில எந்த ஊம உலோகங்கள் மறைந்திருக்கின்றனவா என்பதை பதிவுசெய்து காட்டுமென அவர் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## நான்காமத்தியாயம்

(முற்றொடர்)

(உ) ததேவாக்நிஸ் ததாதித்யஸ் தத்வாயுஸ்
தது சந்த்ரமா:, ததேவ ஶுக்ரம்
தத்ப்ரஹ்ம ததாபஸ் தத்ப்ரஜா
பதி:

இ-ள்: தத் ஏவ அக்நி:-அக்கினியுமவரே, தத் ஆதித்ய:- சூரியனுமவரே, தத்வாயு:- காற்றுமவரே, தத் உ சந்த்ரமா:- சந்திரனுமவரே, தத் ஏவ ஶுக்ரம்-சுக்கிரன முதலிய நட்சத்திரங்களுமவரே, தத் ஆப:- தண்ணீருமவரே, தத ப்ரஹ்ம- (இங்ஙனம் எவற்றினும் நிறைந்து எல்லாமாய் நின்றாராயினும் அனைத்திற்கும் மேலான) பிரமமுமவரே, தத்ப்ரஜாபதி:- அவரே ஆன்மாக்களுக்குத் தலைவராயுள்ளார். இருக்குவேதம் பின்வருமாறு கூறும்.

'உள்ள ஒன்றை அறிஞர்கள் இந்திரன் என்றும், மித்திரனென்றும், வருணன் என்றும், அக்கினி என்றும், கருடன் என்றும், யமன் என்றும், வாயு என்றும் பல நாமங்களால் கூறுவர், (இருக்-௧-௧௬௪ ௪௬)

'தீயாகி நீராகித் திண்மையாகித் திசையாகி யத்திசைக்கோர் தெய்வமாகித் தாயாகித் தந்தையாய்ச் சார்வுமாகித் தாரகையு ஞாயிறுந் தண்மதியுமாகிக், காயாகிப் பழமாகிப் பழத்தினின்ற விரதங்களுகர் வானுந் தானேயாகி, நீயாக நானாகி நேர்மையாகி நெடுஞ்சடராய் நிமிர்ந்தடிகணின்றவாறே' நா-தேவாரம்.

பொ-ரை அக்கினி முதலிய பூதங்களும சூரிய சந்திராதிகளுமவரே அவற்றிற்கெல்லாம மேலாய் நின்று உயிர்களை ஐந்தொழிற்படுத்துந் தலைவருமவரே.

(௩) த்வம்ஸ்த்ரீ த்வம்புமாநஸித் வம்குமார உத வா குமாரீ, த்வம் ஜீர்ணோ தண்டேந வஞ்சஸி த்வம் ஜாதோபவஸி விஶ்வதோமுக:

இ-ள் த்வம ஸ்திரீ-பெண்ணும் நீ, த்வம்புமாந அஸி-ஆணும் நீ த்வம் குமார:- குமாரனும் நீ, உத வா குமாரீ-அன்றியும் குமாரியும் நீ, த்வம ஜீர்ண: தண்டேந வஞ்சஸி-தண்டோடு திரியும வயோதிபனும் நீ, த்வம் விஶ்வதோமுக: ஜாத: பவஸி-எங்கும முகங்களையுடையவனாய் (சர்வவியாபியாய்த் தோன்றியவனும் நீயாகவே இருக்கிறாய்.

'அப்பனீ யம்மைநீ யையனுநீ யன்புடைய மாமனு மாமியுநீ, ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ யொருகுலமுஞ் சுற்றமுமோரூரு நீ, துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய் நீ, இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்து நீ யிறைவனீ யேறூர்ந்த செல்வனீயே'

நா-தேவாரம்,

பொ-ரை- பெண்ணு மாணும் முதலிய பேதத் தோற்றங்களனைத்தும நீயேயாயினும, அவற்றுக்கும வேறாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும பரமபொருள் நீயாகவே இருக்கிறாய்.

(௪) நீல: பதங்கோ ஹரிதோ லோஹிதாக்ஷஸ் தடித்கர்ப ருதவ: ஸமுத்ரா:, அநாதிமத் த்வம விபுத்வேந வர்தஸே யதோ ஜாதாநி புவநாநி விஶ்வா.

இ-ள் (த்வம்) நீல: ஹரித: லோஹிதாக்ஷ: பதங்க:- நீலப்பறவையும் பச்சைப்பறவையும் சிவந்த கண்ணுள்ள பறவையும நீ, த்வம தடித்கர்ப: ருதவ: ஸமுத்ரா:- மேகமும், இருதுக்களும, சமுத்திரங்களும நீ, அநாதிமத் த்வம் விபுத்வேந வர்த்தஸே-வியாபகத்தன்மையினால் (அவ்வாறு) இருக்கிறாய், யத:-எதனால், விஶ்வாபுவநாநி ஜாதாநி-எல்லாப் புவனங்களும் (உன்னிடமிருந்து) தோற்றுகின்றனவோ, (அதனால்) த்வம் அநாதிமத்-நீ தோற்றமும் இறுதியுமற்றவன.

பொ-ரை- எப்பொருட்களும் ஆதாரமாயுள்ளவரும், எல்லாப் புவனங்களுந் தோன்றி யொடுங்குதற்கு ஆதாரமாயுள்ளவருமாகிய சிவபெருமான் தோற்றமு மிறுதியுமில்லாதவர்.

(௫) அஜாமேகாம் லோஹிதஶுக்லக்ருஷ்ணாம் பஹ்வீ: ப்ரஜா, ஸ்ருஜமாநாம ஸரூபா:, அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோ அநுஶேதே ஜஹாத்யேநாம் புக்தபோகாமஜோ ந்ய:-

இ—ள: லோஹிதஶுக்லக்ருஷ்ணாம்-செம்மை வெண்மை கருமை (ராஜதம் சாத்துவிதம தாமதமாகிய முக்குணங்களை) உடையவளும் ஸரூபா: பஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமாநாம்—தன்னையொத்த தோற்றமுள்ள பல பிரஜைகளைத் தோற்றுவிப்பவளும், அஜாம் ஏகாம்: பிறப்பற்றவளுமாகிய ஒருத்தியை (பிரகிருதியை) அஜ: ஹி ஏக:- பிறப்பற்ற ஒருவனாகிய சீவான்மாவானவன், ஜுஷமாண: அநுஶேதே- விரும்பியனுபவித்துக்கொண்டு பக்கத்தில் கிடக்கிறான், அஜ: அந்ய:- பிறப்பற்ற (அநாதியாயுள்ள) மற்றொருவன (பரமான்மா), புக்தபோகாம்-(சீவான்மாவினால்) அனுபவிக்கப்பட்ட போகங்களையுடைய, ஏநாம்-இந்தப் பிரகிருதியை, ஜஹாதி - உயிர்கள் பொருட்டு விட்டு விடுகின்றான்.

கு-பு- (க) 'செம்மை, வெண்மை, கருமையுடையவள்' செம்மை-இராசதகுணத்தையும், வெண்மை-சாத்துவிதகுணத்தையும், கருமை-தாமதகுணத்தையும் குறிப்பன, முக்குணங்களும் சிறிதும் விளங்காது. (அவ்வியக்தமாய்) சமப்பட்டு நிற்கும் நிலை பிரகிருதி எனக் கூறப்படும. வியக்தம-வெளிப்பட்டது. அவ்வியக்தம் - வெளிப்படாதது. பௌஷ்கர ஆகமம் பின்வருமாறு கூறும. 'அவ்வியக்தமாயுள்ள குணங்களின் சாமியம் பிரகிருதி. வியக்தமாயுள்ள குணங்களின சாமியம குணதத்துவம்"

கு-பு: (உ) "தன்னையொத்த தோற்றமுள்ள பல பிரசைகளைத் தோற்றுவிப்பவள்"-பிரகிருதி தன்னிடத்துத தோன்றிய போக போக்கியப் பொருட்களிலும் அவற்றில் வீழ்ந்து போகம் நுகரும் உயிர்களிலும குணவடிவமாய் இயைந்து நிற்கும. சிவஞான சித்தியார் பின்வருமாறு கூறுகின்றது. "வருங் குணவடிவாய் மூலப் பிரகிருதி கலையிற் றோன்றித், தருங்குண மூன்று மொன்றற்றொன்று மும்முனறாகும், இருங்குண ரூபமாகியியைந்து மேவகு மானமாய், பெருங்குண வடிவாய்ப் போகசாதனம பகுதமாமே.

கு-பு: (௩) "பரமான்மா......பிரகிருதியை உயிர்களின் பொருட்டு விட்டுவிடுகின்றான்" இருவினையொப்பு மலபரிபாகம வருவதற் பொருட்டு இறைவன உயிர்களை பிரகிருதி காரியங்களோடு சேர்த்து வினைப்பயனகளை ஊட்டிக கழிப்பிப்பன் எனபது கருதது,

"காலகொடுத திருகைசேற்றிக் கழிகினாத் திறைச்சி மேய்ந்து, தோலபடுத் துதிரநீரற் சுவரெடுத திரண்டு வாசல், ஏலவுடைத்தா வமைதத்திட்டே யசாமீலதப்பண்ணி காலகொடுத்தார் வைத்தார் மாமறை காட்டுறை நா-தேவாரம்,

## புலோலித் தமிழ் இளைஞர் கழகம்

மேற்படி கழகத்தின் 2வது பொதுக் கூட்டம் நிகழும் தாரண வருஷம் ஆவணிமாதம் 14-ந் திகதி (29-8-44) செவ்வாய்க்கிழமை மாலை 7 மணியளவில் புலோலிதெற்கு எம், எம், பள்ளிக் கட்டிடத்தில் நடைபெற்றது. திரு. A. பெருமையினர் (D.R.O. வடமாட்சி) அவர்கள் தலைமை வகித்தார்கள். அவ்வமயம் வித்துவான் P. சிவப்பிரகாசம் அவர்களால் 'அகத்தினழகு' என்னும் விஷயமும், திரு. மூ. கணபதிப்பிள்ளை அவர்களால் 'தமிழும் வருங்காலமும்' என்னும் விஷயமும் இனிதாகப் பேசப்பட்டன. இசையாசிரியர் திரு. சு. திருவிளங்கம் அவர்களால் இன்னிசைபாடப் பட்டது. இற்றில் தமிழ்த் தெய்வவணக்கத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது. கடித.

## சிவஞான சித்தியார் விரிவுரைகள்

நிகழும் புரட்டாதிமாசம் 4ந் திகதி (19-9-44) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5-30மணிக்குசைவசித்தாந்தமன்றத்தின் ஆதரவிலே தெஹிவலை, வின்ஸர்அவென்யூ 76ம்இலக்கஇல்லத்தில் சைவத்திருவாளர் சி. முருகேசு அவர்கள் "சிவஞான சித்தியார்" என்னும் பொருள்பற்றி ஓர் அரிய உபந்நியாசம் செய்வாரென்றும் அதன் பின்னர் பன்னிரண்டு வாரங்கட்கு ஒவ்வொரு வாரமும் சிவஞானசித்தியாரின் ஒவ்வொரு சூத்திரத்தையும் ஆதாரமாகக் கொண்டு திரு. முருகேசு அவர்கள் பன்னிரண்டு விரிவுரை செய்வாரென்றும் தெஹிவலைச் சைவசித்தாந்த மன்றக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

"காரிட்ட வாணவக் கருவறையிலறிவற்ற கண்ணிலாக் குழவியைப் போற் கட்டுண்டிருந்த வெமை வெளியில விட்டல்லலாங் காப்பிட்டதற் கிசைந்த, பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம பொய்யுடல் பெலக்கவினை யமுதூட்டிப் பெரிய புவனத்தினிடை போக்கு வரவுறுகின்ற பெரியவிளையாட் டமைத, தேரிட்டதனை சுருதி மொழி தப்பின மனவிட்டிடருற வுறுக்கியிடர் தீர்த் திரவுபகலில்லாத பேரின்ப வீட்டினில் இருத்தி துயில்கொள்ளுமென்ற, சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே சித்தாந்த முத்திமுதலே சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே சின்மயானந்த குருவே" —தாயுமானர்.

பொ—ரை: முக்குண வடிவாகிய பிரகிருதி (மாயை) அநாதி நித்தமாயுள்ளது. உலகத தோற்றத்திற்கு முதற் காரணமதுவே. முதல்வன அநாதியாயுள்ள ஆன்மாக்களை அதன் காரியங்களோடு சேர்த்து வினைப் பயன்களை ஊட்டுகின்றான.

இம்மந்திரத்தினால், பதிபசுபாசங்களின் அநாதி நித்தியத் தன்மையும, பதி பொருட்டன்மையினால் பசுக்களின வேறானவன் என்பதும முதலியன நன்கு தெளிந்துரைக்கப்பட்டன. கீழ்வரும மந்திரங்களும இனமேற்றானவற்றை நன்கு வ புறத்தும்.

இதனால், பிரமமே ஒருகாலத்தில் மாயையினால் மயங்கித் தன்னை மறந்து சீவனாயிற்று, சீவனென்ற பொருள பிரமத்துக்கு வேறாயில்லை என்று கூறும மாயாவாதவேதாந்தம கண்டிக்கப்பட்டமை கண்டுகொள்க.

## கொழும்பு விவேகானந்த சபை

தற்பொழுது இரண்டாம் முறையாக இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் காஞ்சீபுரம் மெய்கண்டார் கழக ஆசிரியரும் காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் சிஷ்யருமான ஸ்ரீமத் பொன் குமாரசுவாமிஅடிகள் மேட்டுத் தெருவிலுள்ள விவேகானந்தசபை மண்டபத்தில் வாரந்தோறும் புதன்கிழமைகளில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த 'பிரபுலிங்கலீலை' என்னும் பிரபந்தத்தைப் பீடிகையாகக் கொண்டு விரிவுரைகள் நிகழ்த்தி வருகிறார். முதலாவது விரிவுரை நிகழும் ஆவணிமீ 22உ (6-9-44) புதன்கிழமையன்று நிகழ்த்தப்பட்டது.

நிகழும் ஆவணிமீ 25உ (9-9-44) சனிக்கிழமையன்று விவேகானந்தசபையின் ஆதரவின்கீழ் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் மட்டக்களப்பைச் சார்ந்த பண்டிதர் வ. பெரியதம்பிப்பிள்ளையவர்கள் 'இராமாயணமும் சமத்துவ வாழ்க்கையும்' என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். அக்கினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. கே. எஸ். அருணந்தி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் திருநாள் நிகழும் ஆவணிமீ 27உ (11-9-44) திங்கட்கிழமை யன்று மேட்டுத் தெருவிலுள்ள விவேகானந்தசபை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ க. இராமச்சந்திரனவர்கள் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். பாரதியாரின் கவித் திறனையும் நாட்டுக்கு அவர் செய்த அரிய சேவைகளையும் பாராட்டி திரு. சோ. நடராஜனவர்கள், பண்டிதர் வ. பெரியதம்பிப்பிள்ளையவர்கள், திரு. வி. மாதனவர்கள் ஆதியோர் பேசினர். திரு. சி. சோமாஸ்கந்தனவர்கள் பாரதியாரின் பாடல்களில் சிலவற்றை அழகாகப் பாடினர். கடித.

## பாரதி விழா

மட்டக்களப்புத் திருத்தொண்டர்கழகத்தின் சார்பில், ஆனைப்பந்தி விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் சென்ற திங்கட்கிழமை (11-9-44) மாலை 6 மணிக்கு ஸ்ரீமத் இருதஜாநந்தசுவாமி அவர்கள் தலைமையில் மேற்படி விழா கொண்டாடப்பட்டது. பாரதியாரின் படம் ஸ்ரீ சிவாநந்த வாசிகசாலையிலிருந்து ஊர்வலமாகக் கொண்டு போகப்பட்டது. பின் சுவாமி அவர்கள் தமிழுக்கும் தமிழருக்கும் சுப்பிரமணிய பாரதியார் புரிந்ததொண்டை விளக்கிப் பேசினார்கள். 'பாரதியும் பெண்மணிகளும்' என்னும் விஷயம்பற்றிச் செல்வி N. கங்கேஸ்வரி ஒரு சொற்பொழிவாற்றினர். அதன்பின் திரு. K. கணபதிப்பிள்ளை அவர்கள் பாரதியாரைப்பற்றிச் சுருக்கமாகக்கூறினர். பாரதியார்பாடல் இடையிடையே அன்பர்களாற் பாடப்பட்டது. மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்த அடிகளுக்குப் பின் மதுரைத் தமிழ்ப் பண்டித பரீட்சையில் சித்தியடைந்த மண்டூர் V. S. கந்தையா அவர்களுக்குச் சபை முதல்வரால் பரிசு வழங்கப்பட்டது. பின் காரியதரிசி நன்றியுரை கூறியதும 'வந்தேமாதரம்' என்ற பாட்டுடன் கூட்டம் இனிது நிறைவேறியது. —கடித.

வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 18, September 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org